ஆகையால், காட்டுப்பன்றிகளைக் கொல்வதற்கான உரிமங்கள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகளைச் சுட்டுக் கொல்ல விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான அனுமதிகளை வழங்க சம்பந்தப்பட்ட வனவிலங்கு காப்பாளருக்கு, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சட்ட விதிகளின்படி அனுமதி பெறாமல், வேட்டையாட முயற்சிக்கும் நபர்களின் மீது, வனத்துறை ஆதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கலாம். இந்த, சங்கடங்களைத் தவிர்க்க முறையாக விண்ணப்பிதது, காட்டுப்பன்றிகளைக் கொல்ல அனுமதிப் பெற்றுக் கொள்வதில் தடை ஒன்றும் இல்லை. எனவே, காட்டுப் பன்றிகளால் பயிர் நாசமடைவதைத் தடுக்க முயற்சிக்கும் விவசாயிகளை வனத்துறை அதிகாரிகள் மிரட்டுகிறார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. இதன் காரணமாக அம்பாசமுத்திரம் பகுதியில் விவசாயிகளிடையே பதட்ட நிலை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது பதட்ட நிலை இல்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, சேரன்மாதேவி பகுதியில் எலுமிச்சம்பழத்தை வைத்துத்தான் பன்றிகளை விரட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். எல்லோராலும் துப்பாக்கி வாங்க முடியாது. ஆகவே, கல்வீச்சி விரட்டுவதற்கு அனுமதி அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, சட்டத்திலே சுட்டுக் கொல்வதற்குத்தான் அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் புதிய முறையைச் சொல்கிறார்கள். அவர்கள் முறையாக அரசுக்கு எழுதித் தருவார்களானால் உடனடியாக அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புகுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்கள் கல்லூரிகளில் முடிக்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. மணிமாறன் அவர்கள் ஒரு அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, ''தமிழ் நாட்டிலுள்ள பெரும்பான்மையான கல்லூரிகளில் இன்னும் புதுமுக வகுப்புகளுக்கு உரிய பாடங்களை முடிக்கப் பெறாமல் இருக்கும்போது தேர்விற்காக மாணவர்களுக்கு படிப்பு

[திரு. மா. மணிமாறன்] [1979 மார்ச் 17

விடுப்பு கொடுக்கப்பட்டதை குறித்து'' ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான கல்லூரிகளில் இன்னமும் புகுமுக வகுப்புக்களுக்குரிய பாடங்கள் முடிக்கப் பெறாமல் இருக்கும்பொழுது தேர்விற்காக மாணவர்களுக்குப் படிப்பு விடுப்பு கொடுக்கப்பட்டதைக் குறித்து சட்ட மன்ற உறுப்பினர் திரு. நன்னிலம் மணிமாறன் அவர்கள் இக்கவன ஈர்ப்பு பிரேரணையைக் கொணர்ந்துள்ளார்.

2. இங்ஙனம் பாடப் பகுதிகள் முடிக்கப்பெறாமல் இருக்கும் பொழுது, தேர்விற்கான விடுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளாரேயன்றி குறிப்பிட்ட கல்லூரியை உறுப்பினர் சுட்டிக் காட்டவில்லை. எனினும் இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஆய்ந்தறியப் பட்டதில் பொதுவாக கல்லூரிகளில் தேர்வுகளுக்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னரே, படிப்பு விடுப்பு வழங்கப் பெறும், பாடங்கள் முழுதும் முடிக்கப்பட்ட நிலையில் தான் படிப்பு விடுப்பு வழங்கப்படுமென்றும், இத்தகைய படிப்பு விடுப்புக்கு அரசின் அனுமதியோ இயக்குநரின் அனுமதியோ தேவையில்லை என்றும் அந்தந்த கல்லூரி முதல்வர்களே வழங்கலாம் என்றும் இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார். அல்லாமலும் இத்தகைய விடுப்பு அனைத்துக் கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் விடப்படுவதில்லை என்றும், படிப்பு விடுப்பு வழங்கிய கல்லூரிகளில் பாடங்கள் முடிக்கப்பெறப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரின் செயலருக்கு நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டில் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்றபோது பல பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதனால் கல்லூரிகளில் பாடங்கள் சரியாக நடத்தப்படவில்லை. இந்தத் தீர்மானம் அந்த நேரத்தில் என்னால் கொடுக்கப்பட்டது. பல நாட்கள் ஆகிவிட்டபடியால், இப்போது நிலைமை மாறியிருந்தால் அதற்கு நான் குற்றவாளி அல்ல. எந்தக் கல்லூரியிலாவது பாடங்கள் இன்னும் முடிக்கப்படாமல் இருந்தால், அதை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 17]

திரு. ஆ. வெள்ளைச்சாமி : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, பொதுவாக கல்லூரிகளில படிப்பு விடுப்பு விடுகிறார்கள் என்றால் பாடங்கள் எல்லாம் முடிந்த பின்னால்தான் விடுவார்கள். அப்படி பாடங்கள் முடிய வில்லை என்றால், விடுப்பு விட்டிருந்தாலும் 'ஸ்பெஷல வகுப்பு' வைத்து பாடங்களை முடிக்கும் முறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காதது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் அ. செல்லப்பா, தாழை மு. கருணாநிதி, மா. மணிமாறன், வ. துலுக்காணம், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. அ. செல்லப்பா : தலைவரவர்களே, ''சென்னை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காதது பற்றியும், மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை குறித்தும்'' ஆன அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே,

இந்த அரசு பதவி ஏற்றவுடன் 1977 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8 ஆம் நாள் மருத்துவம் பொறியியல் கல்லூரிகள் உட்பட சென்னையில் உள்ள அனைத்துக் கல்லூரி முதல்வர்களையும் அழைத்து படிப்புதவித் தொகை விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், படிப்புதவித்தொகை வழங்குதல் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள் முடிக்கப்பட்டு எப்பகுதியிலிருந்தும் புகார் வராமல் பார்த்துக் கொள்ளுமாறு அரிசன நல அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

2. பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த தகுதியுடைய மாணவர்களுக்கு இந்திய அரசு மற்றும் மாநில அரசு படிப்புதவித்